# கள்ளக்குறிச்சி நகராட்சி

**2021ம் ஆண்டு ஜீன் மாதம் 30ஆம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு என்.குமரன், B.Sc.,**

## பொருள் எண் 01

மாவட்ட ஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களின் நேரடி அறிவுரையில் தற்போது சட்டமன்றதேர்தல் நடைபெற உள்ளதால் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அரசியல் சம்மந்தமான சுவர் விளம்பரம் செய்யப்பட்டுள்ளதை பணியாளர்களை கொண்டு உடனடியாக அழிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. எனவே, மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15 ன் கீழ், பணி மேற்கொண்டமைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 225498/–யை (ரூபாய் இரண்டு லட்சத்து இருபத்தி ஐந்தாயிரத்து நானூற்று தொன்னூற்று எட்டு மட்டும்) M/s. ஸ்ரீ கிருஷ்ணா எலக்ட்ரிகல்ஸ், பெரம்பலூர் என்ற நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:–**

1.பதிவு செய்யலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவரின் முன்னனுமதி பெற்று M/s. ஸ்ரீ கிருஷ்ணா எலக்ட்ரிகல்ஸ், பெரம்பலூர் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

3.பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 553/2021 /எச்1)**

## பொருள் எண் 02

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் கள்ளக்குறிச்சி அவர்களின் கடித ந.க.எண்.எச்1/9696/2020 நாள்–05.03.2021 ல் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வாக்குசாவடி மையங்களிலும் தேர்தல் நடக்கும் நாளன்று கொரோனா நோய் தொற்று தடுக்கும் பொருட்டு தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தப்பட்ட கையுறைகள், முகஉறைகள் மற்றும் முழு உடற்கவசங்கள் ஆகியவைகளை சேகரம் செய்ய ஏதுவாக 70 லிட்டர் கொள்ளவு கொண்ட பிளாஸ்டிக் குப்பைகூடைகள் மற்றும் அவ்வாறு சேகரம் செய்யப்படும் குப்பைகளை பாதுகாப்பான முறையில் கையாள கறுப்பு நிற பிளாஸ்டிக் கவர்கள் ஆகியவற்றை இந்நகராட்சி பகுதியில் 74 வாக்குசாவடி மையங்களுக்கு தேவையான அளவு கொள்முதல் செய்து கள்ளக்குறிச்சி துணை இயக்குநர் சுகாதார பணிகள் அவர்களிடம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டது. எனவே, பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன்கருதியும் 75 லிட்டர் கொள்ளளவு கொண்ட பிளாஸ்டிக் குப்பை கூடைகள் 74 எண்கள், கறுப்பு நிற பிளாஸ்டிக் கவர் 200 எண்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்ய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15 ன் கீழ், பணி மேற்கொண்டமைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 183608/–யை (ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்தி மூன்றாயிரத்து ஆறுநூற்று எட்டு மட்டும்) M/s. ஸ்ரீ சுதர்ஷனா டிரேடர்ஸ், பெரம்பலூர் என்ற நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:–**

1.பதிவு செய்யலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவரின் முன்னனுமதி பெற்று M/s. ஸ்ரீ சுதர்ஷனா டிரேடர்ஸ், பெரம்பலூர் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

3.பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 729 /2021 /எச்1)**

## பொருள் எண் 03

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் நோய் 2வது அலை வெகுவாக பரவிவருவதை தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தேவையான கிருமிநாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்ய பணியின் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15 ன் கீழ், பணி மேற்கொண்டமைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 1180408/–யை (ரூபாய் பதினொரு லட்சத்து என்பதாயிரத்து நானூற்று எட்டு மட்டும்) M/s. ஸ்ரீ சுதர்ஷனா டிரேடர்ஸ், பெரம்பலூர் என்ற நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:–**

1.பதிவு செய்யலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவரின் முன்னனுமதி பெற்று M/s. ஸ்ரீ சுதர்ஷனா டிரேடர்ஸ், பெரம்பலூர் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

3.பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 733 /2020/25 /எச்1)**

**பொருள் எண் 04**

மாவட்ட ஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களின் நேரடி அறிவுரைக்களுக்கிணங்க இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தொற்று 2 வது அலை அதிகளவில் பரவி பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் இப்பகுதியில் இந்நோய் தொறறு மேலும் பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகாக அனைத்து வார்டு பகுதியிலும் கிருமிநாசினி தெளிக்கும் பணிகள் மேற்கொள்ள தற்காலிக பணியாளர்களை நியமனம் செய்து பணிகள் மேற்கொளள அறிவுறுத்தப்பட்டது. எனவே, மேற்கண்ட பணிக்கு 20 நபர்களை தற்காலிகமாக நியமனம் செய்து கிருமிநாசினி தெளிக்கும் பணிகள் மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன்கருதியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் 1920 சட்டம் பிரிவு 15 ன் கீழ் அனுமதி பெறப்பட்டு மே 2021 மாதத்திற்கு பணிகள் மேற்கொண்டமைக்கு தொகைரூ.139867/– (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்தி ஒன்பதாயிரத்து என்னூறறு அறுபத்தி ஏழு மட்டும்) ராசி மகளிர் சுய உதவிக்குழு, கள்ளக்குறிச்சி என்ற குழுவிற்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1.மன்றம் பதிவு செய்யலாம்.

2.மேற்படி பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 733/2020/27 /எச்1)**

**பொருள் எண் 05**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உத்திரவு மூ.மு.எண்.25032/2018/பி3 நாள்:–24.10.2018 ல் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 124 துப்புரவு பணியாளர்கள் விநியோகம் (Out Sourcing) 3 ஆண்டுகளுக்கு மேற்கொள்ளும் பணிக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, இந்நகராட்சியின் மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வாயிலாக கடந்த 15.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், M/s.கிரீன் வாரியர் சென்னை என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று, இந்நகர் மன்ற தீர்மான எண்.68 நாள் :– 31.07.2019 ல் அனுமதி பெறப்பட்டு, இந்நகராட்சி செயல்முறை ஆணை உத்தரவில் கடந்த 01.08.2019 முதல் 31.07.2020 வரை ஓராண்டு காலத்திற்கு துப்புரவு பணிகள் இந்நகராட்சி பகுதியில் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இந்நகர்மன்ற தீர்மான எண். 328 நாள்.30.07.2020ல் மேற்கண்ட பணிக்கு ஓராண்டு காலம் பணி நீட்டிப்பு செய்து தூய்மை பணிகள் மேறகொளள பணி உத்தரவு வழஙகப்பட்டு 31.07.2021 அனறுடன முடிவடைவதால தற்போது மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் M/s.கிரீன் வாரியர் சென்னை என்ற நிறுவனத்தின் மூலமாகவே தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்த விலையில் கூடுதலாக 10 % உயர்த்தி மேற்கண்ட நிறுவனத்திற்கு ஓராண்டு காலம் வேலை உத்திரவு காலநீட்டிப்பு செய்யலாம் என துப்புரவு ஆய்வாளர் அவர்களால் குறிப்புரை தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பணிக்கு உண்டாகும் ஓர் ஆண்டுக்கு செலவீனத்தொகை ரூ.233.00 லட்சம் ஆகும். இதனை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.01.08.2021 முதல் 31.07.2022 வரை ஓராண்டு காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.211.00/– லட்சத்திற்கு கூடுதலாக 10% நிர்ணயம் செய்து மதிப்பீட்டு தொகை ரூ.233.00 லட்சத்திற்கு செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2456/ 2018 /எச்1)**

**பொருள் எண் 06**

நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் டெங்கு, கொரோனா போன்ற வைரஸ் நோய் தடுப்பு பணிகளுக்கு 47 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது கொரோனா வைரஸ் நோய் இரண்டாவது அலை வெகுவாக பரவி வருவதால், மாவட்ட ஆட்சியரின் நேரடி அறிவுரையில் நகரப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு இந்நோய் குறித்து நன்கு அறியும் வண்ணம் ஸ்டிக்கர், சுவரொட்டிகள், மற்றும் டிஜிட்டல் பேனர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்திட அறிவுறுத்தப்பட்டது.அதன்படி இந்தொற்று குறித்து பொதுமக்களிடம் முககவசம் அணிதல், சமூக இடைவெளியை பினபற்றுதல், கைகழுவுதல் மற்றும் தடுப்பூசி போட்டுக்கொள்வது குறித்த விழிப்புணர்வு மல்டிகவர் ஸ்டிக்கர், போஸ்ட்டர், டிஜிட்டல் பேனர் ஆகியவற்றை பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ் திருச்சி என்ற நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.6.50 ( ரூபாய் ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பொது மக்களின் நலன் கருதியும், பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ் திருச்சி என்ற நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3.பட்டியல் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 733 /2020/30 / எச்1 )**

**பொருள் எண் 07**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் (TATA ACE) வாகன எண். TN15 P 3133 என்ற வாகனத்திற்கு தகுதி சான்று பெறும் பொருட்டு வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் 14.06.2021 அன்று கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | JVK ஆட்டோ டீசல் ஓர்க்ஸ், சேலம் | 115000.00 |
| 2 | யோகா மோட்டார்ஸ், சேலம் | 126200.00 |
| 3 | ஸ்ரீஜெயலட்சுமி மோட்டார் ஓர்க்ஸ், மரவானேரி, சேலம் | 134100.00 |

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **JVK ஆட்டோ டீசல் ஓர்க்ஸ், களரம்பட்டி மெயின் ரோடு, சேலம்** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3.இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1200 /2021/எச்1)**

**பொருள் எண் 08**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட கச்சிராயப்பாளையம் சாலையில் அமைந்துள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை முன்புறம் உள்ள நெடுஞ்சாலையில் கொரோனா நோயாளிகளை வகைப்படுத்தி சிகிச்சை செய்யும் மையம் தற்காலிகமாக ஏற்படுத்துவதற்கு, தற்காலிக கூடாரம் அமைப்பதற்கு கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, மேற்படி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கும், நெடுஞ்சாலையின் மைய தடுப்பு சுவற்றிற்கும் இடைப்பட்ட பகுதியில் தற்காலிக கூடாரம் அமைப்பதற்கு, தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9,50,000/-க்கு தயார் செய்யப்பட்டு, மேற்படி பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 விதி 15இன் கீழ் பணியின் அவசர அவசியம் கருதி திருடி.எம்.வீரன், மாநாட்டு பந்தல் டெக்கரேஷன் ஒப்பந்ததாரர், திருமானூர் என்பவர் மூலமாக மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு தற்போது பட்டியல் தொகை ரூ.8,27,996/-ஐ வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் 733/2021/இ1

**பொருள் எண் 09**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 10, 15 மற்றும் இதர பகுதிகளில் புதியதாக வீட்டு மனைப்பிரிவுகள் அமைக்கப்பட்டு, குடியிருப்புகள் அதிகமாக உள்ளன. எனவே, மேற்படி பகுதிகளில் உள்ள குடியிருப்புதாரர்களுக்கு அடிப்படை வசதியான குடிநீர் வழங்குவது மிகவும் முக்கிய கடமையாகவும், இக்கட்டிடங்களுக்கு UIDSSMT திட்டத்தின் மூலம் நகராட்சி சார்பில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்குவது அவசியமான பணியாக உள்ளது. எனவே, இப்பகுதிகளில் உள்ள தெருக்களுக்கு முதல் அடிப்படை வசதியான குடிநீர் விநியோக குழாய் அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 8,00,000/- (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்)-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/இ1)**

**பொருள் எண் 10**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 11, பாரதி பள்ளி சிதம்பரம்பிள்ளைத் தெரு பகுதிக்கு குடிநீர் சீரான முறையில் வழங்கப்படவில்லை என உங்கள் தொகுதியில் முதல்வர் மனுவில் புகார் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படி இடத்தினை ஆய்வு செய்து, பாரதி பள்ளி முன்புறம் உள்ள 2 ஆழ்துளை கிணறுகளில் புதியதாக மின் மோட்டார் பொருத்தி அருகில் உள்ள 30000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீர் ஏற்றம் செய்து விநியோகிக்க தெரிவிக்கப்பட்டது. மேலும், உங்கள் தொகுதியில் முதல்வர் மனுவில் பெறப்பட்ட நகராட்சியின் பிற பகுதிகளான வார்டு எண். 02, 06, 11, 12 மற்றும் 15 ஆகிய பகுதிகளில் உள்ள சிறு மின் விசைப்பம்புகள் / விசைப்பம்புகளை பழுது நீக்கம் செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 02, 06, 11, 12 மற்றும் 15 ஆகிய பகுதிகளில் உள்ள சிறுமின் விசைப்பம்புகள் / விசைப்பம்புகள் பழுது நீக்கம் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் / குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/இ1)**

## பொருள் எண் 11

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 10, துருகம் சாலையில் நகராட்சி எல்லைப்பகுதியில் குறிஞ்சி மஹால் முன்புறம் நகராட்சியின் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு போதுமான குடிநீர் பகிர்மான குழாய்களோ / துணை விநியோக குழாய்களோ இல்லாததால், இப்பகுதியில் வசிக்கும் 50க்கும் மேற்பட்ட குடியிருப்புகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, முதற்கட்டமாக மேற்படி இடத்தில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மோட்டார் பொருத்தி சிறிய குடிநீர் தொட்டி அமைத்து தண்ணீர் வசதிகள் ஏற்படுத்துவதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 3,50,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் / குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/இ1)**

## பொருள் எண் 12

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 14, நகராட்சிக்கு சொந்தமான குளம் அமைந்துள்ளது. இக்குளம் பல ஆண்டுகளாக பராமரிப்பின்றி உள்ளது. மேற்படி குளத்தினை கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நேரடி தல ஆய்வு செய்யப்பட்டு, குளத்தினை மேம்படுத்திட அறிவுறுத்தியுள்ளார். எனவே, மேற்படி குளத்தினை புணரமைக்கும் விதமாக தற்போது முதற்கட்டமாக மேற்படி குளத்தின் கரைளை (வடக்கு மற்றும் கிழக்கு பகுதி) கருங்கற்கள் கொண்டு சுவர் அமைத்திடவும், கிழக்கு பகுதியிலிருந்து இக்குளத்திற்கு வரும் மழைநீர் கால்வாயினை சீரமைத்து, கால்வாயினை பலப்படுத்தும் விதமாக கருங்கல் மூலம் கரையினை பலப்படுத்திடவும், அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 8,80,000/– (ரூபாய் எட்டு இலட்சத்து என்பதாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/இ1)**

## பொருள் எண் 13

கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் LCV வாகன எண்.TN15 P 3121 என்ற வாகனத்திற்கு தகுதிசான்று பெறும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்யு பணிக்கு குறைந்த விலைப்புள்ளிகள் 14.06.2021 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகள் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு

| வ. எண் | நிறுவனத்தின¦ பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | **M/s.Perfect Auto Engineering Works, Salem** | 99200.00 |
| 2 | M/s.Sri Jothimurugan Motor Works, Salem | 101900.00 |
| 3 | M/s.Jahanghir Motor Works, Salem | 102940.00 |

**அலுவலக குறிப்பு:–**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில¦ வ.எண்.1ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **M/s.Perfect Auto Engineering Works, Salem** என்ற நிறுவனத்தின¦ விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3.இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1196 / 2021 / எச்1 )**

## பொருள் எண் 14

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 02, வ.உ.சி. நகர் 1–வது பிரதான சாலையில் நகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி கிணறு அமைந்துள்ளது. மேற்படி கிணறு பல ஆண்டுகளாக பராமரிப்பு இன்றி பழுதடைந்து உள்ளது. இப்பகுதியில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 17.06.2021 அன்று நேரடி தல ஆய்வு செய்யப்பட்டதில், மேற்படி கிணற்றினை சுத்தம் செய்து, தூர்வாரி மேம்படுத்திடவும், அருகில் உள்ள குடியிருப்புகளிலிருந்து வரும் மழைநீரினை தேக்கி, மழைநீர் சேகரிப்பாக மாற்றிடவும், எதிர்வரும் மழைக்காலங்களில் கிணற்றின் நீர்மட்டம் உயரும்போது கிணற்று நீரினை பயன்படுத்தும் வகையில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார். எனவே, மேற்படி திறந்தவெளி கிணற்றுக்கு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 3,50,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/இ1)**

## பொருள் எண் 15

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 21, விளாந்தாங்கல் பகுதியில் இந்நகராட்சியின் மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட குடிநீர் விநியோக குழாய்கள் அனைத்தும் பழுதடைந்து அப்பகுதிக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளது. மேற்படி குடிநீர் விநியோக குழாய்களை புதியதாக மாற்றி அமைத்து, சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, மேற்படி பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் / குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/இ1)**

## பொருள் எண் 16

கள்ளக்குறிச்சி நகராட்சியில், வருவாய் நிதி 2021–2022ன் கீழ், கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 22.06.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட துருகம் சாலை மயானம் மற்றும் நுன்உரக்கள மையத்தில் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்துதல் | ரூ. 2,35,000 | M/s. A.K. VISION, Kallakurichi | ரூ. 1,97,085/– 1.61% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. J.K. SECURITY SYSTEM, Kallakurichi | ரூ. 1,89,600/– 5.35% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. MICRO VISION, Kallakurichi | ரூ. 2,03,095/– 1.39% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விலைப்புள்ளிகளில் 5.35% மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. J.K. SECURITY SYSTEM, Kallakurichi என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். / 2021 / இ1)**

## பொருள் எண் 17

கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொது சுகாதார பிரிவிற்கு தேவையான லெமன் கிராஸ் ஆயில் சப்ளை செய்யும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளிகள் 15.06.2021 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | அளவு | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | **ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ், செல்லப்பம்பட்டி, நாமக்கல்** | **1 ltr** | **3000.00** |
| 2 | டிரினிட்டிஎன்டர்பிரைசஸ், சேலம் | **1 ltr** | 3200.00 |
| 3 | ஸ்ரீ பிளஸ்டோ டெக், சென்னை | **1 ltr** | 3100.00 |

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **M/s.ஸ்ரீஅம்மன் டிரேடர்ஸ், செல்லப்பம்பட்டி, நாமக்கல** ’என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3.இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1110 / 2021 / எச்1)**

## பொருள் எண் 18

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட கச்சிராயபாளையம் சாலையில் கடந்த 2011 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தானே புயலால் அதிக அளவில் மரங்கள் சாய்ந்த நிலயில், மேற்படி சாலையோரம் அமைந்துள்ள தெரு மின் விளக்கு கம்பங்கள் சிதலமடைந்தது. அத்தெருமின் விளக்கு கம்பங்களில் பொருத்தப்பட்ட மின் விளக்குகள் அனைத்தும் பழுதடைந்து அப்பகுதி முழுவதும் இருளடைந்து மின் விளக்குகள் இல்லாமல் இருள் சூழ்ந்த நிலையிலேயே தற்போது வரை உள்ளது. மேற்கண்ட தானே புயலால் பாதிக்கப்பட்ட கச்சிராயபாளையம் சாலையில் தெருமின் விளக்குகள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு வேண்டி பலமுறை பிரேரணைகள் அனுப்பப்பட்டு தற்போது வரை நிதி ஏதும் பெறப்படவில்லை.

மேலும், இச்சாலையானது இந்நகரின் முக்கிய சாலையாகவும், கள்ளக்குறிச்சி மாவட்ட தலைநகரின் நுழைவு பகுதியின் ஒரு பிரதான சாலையாகவும் உள்ளதாலும், மாவட்ட ஆட்சியரகம் மற்றும் இதர அரசு அலுவலகங்கள்

மேற்படி சாலையில் அமையப்பெற்றுள்ளதாகவும் இச்சாலை அமைகிறது.

மேற்படி சாலையின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு, அச்சாலையின் ஓரம் புதியதாக தெருமின் விளக்குகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலம் அமைக்கப்படும் பட்சத்தில், மின் கட்டணங்கள் மேலும் அதிகரிக்கக்கூடும் என்பதால், நகராட்சியின் மின்சார சேமிப்பு மற்றும் மின் கட்டண சேமிப்பினை உயர்த்திடும் வகையில் இச்சாலையில் சோலார் எல்.இ.டி. தெருமின் விளக்குகள் அமைத்திடவும், அதற்காக தயார் செய்யப்பப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,50,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். / 2021 / இ1)**

## பொருள் எண் 19

கள்ளக்குறிச்சி நகராட்சி 15.87 ச.கி.மீ. பரப்பளவில், 21 வார்டுகளை உள்ளடக்கி முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 52507 ஆகும். மேலும், இந்நகராட்சிக்குச் சொந்தமாக மொத்தம் 368 சாலைகள் / தெருக்கள் 103.640 கி.மீ. நீளத்திற்கும், மற்ற துறைகளுக்கு சொந்தமான சாலைகள் 10.800 கி.மீ. நீளத்திற்கும் அமையப்பெற்றுள்ளது.

இந்நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் / கசடு கழிவு மேலாண்மை திட்டம் ஏதும் செயல்பாட்டில் இல்லாததால், இந்நகரில் சேகரமாகும் மொத்த கசடு கழிவுகள் அனைத்தும் வடிகால்களின் மூலமாக சென்று அருகில் உள்ள ஓடை மற்றும் ஆற்றுபடுகளைகளில் செல்லுமாறு அமைப்பு உள்ளது. மேலும், இந்நகராட்சி பகுதிகளில் அமைக்கப்பட்ட வடிகால்கள் அனைத்தும் குறிப்பிட்ட Gradient இல்லாமல் உள்ளதாலும், முழுமையான துவக்கம் மற்றும் முடிவுற்ற நிலையில் உள்ளதாலும், வடிகால்களில் வரப்பெறும் கழிவுநீர் ஆங்காங்கே தேங்குவதும், காலி மனைகளில் தேங்குவதுமாகவே உள்ளதால் சுகாதாரக்கேடு ஏற்படும் நிலையில் உள்ளது.

மேற்படி வடிகால்களில் வரப்பெறும் கழிவு நீரினை ஆங்காங்கே தேங்காமல் தடுக்கும் வகையில், சரியான முறையில் Grey Water Treatment முறையில், அதாவது கால்வாய்களை முறைப்புடுத்தும் வகையில் தெருக்கள் / சாலைகளில் சரியான முறையில் சுத்திகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்த முறையான தொழில்நுட்ப ஆலோசனை (Consultancy) மூலம் அளவீடுகள் மேற்கொண்டு, பிரேரனைகள் தயார் செய்து அரசின் திட்ட நிதி பெறவும், உரிய தெளிவுரைகள் பெறவும் தொழில்நுட்ப ஆலோசகர்கள் மூலம் பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வடிகால்களை அளவீடுகள் மேற்கொண்டு, அதன் நீளம், அகலம், உயரம் மற்றும் சீரான முறையில் வடிகால் நீர் செல்வதற்கு வழித்தடம் மற்றும் இதர விவரங்களை Topographical Survey முறையில் அளவீடுகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவீனம் ரூ. 8,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1370 / 2021 / இ1)**

## பொருள் எண் 20

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் வசிக்கும் திரு சிதம்பரம் பூசாலி த/பெ மாணிக்கம் பூசாரி எண் B–17.சிதம்பரம் பிள்ளை தெரு, கள்ளக்குறிச்சி என்பவர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் சர்வே எண் 293/6–ல் அமைந்துள்ள கோவில் நிலத்தை சில தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றக்கோரி W.P.No 12376–2021?இல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக திரு லூர்து பவுல் மௌரியா வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி வழக்கினை நடத்துவதற்கு வழக்குக் கட்டணம் ரூ.15000/– வழங்க கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகை ரூ.15000/–யை மன்றத்தின் அனுமதி பெற்று நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1216/2021/எப்1)

## பொருள் எண் 21

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 10, துருகம் சாலை பழைய மாரியம்மன் கோவில் தெரு பின்புறம் (பழைய நகராட்சி அலுவலகம் பின்புறம்) உள்ள சாலை மேடான பகுதியாக உள்ளதால், இப்பகுதிக்கு துருகம் சாலையிலிருந்து வழங்கப்பட்டுள்ள குடிநீர் விநியோக குழாய்கள் மூலம் சீரான முறையில் குடிநீர் செல்வதில்லை. இந்நிலையில் அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்திடும் வகையில், சிறுவங்கூர் சாலையிலிருந்து புதியதாக 90mm (3") பி.வி.சி. குடிநீர் குழாய்கள் மூலம் சுமார் 250 மீட்டர் நீளத்திற்கு அமைத்தால், அப்பகுதியில் சீரான குடிநீர் விநியோகம் செய்திட இயலும் என்பதால், மேற்கண்ட பகுதியில் புதியதாக குடிநீர் விநியோக குழாய்கள் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 3,25,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் / குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். / 2021 / இ1)**

## பொருள் எண் 22

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குச் சொந்தமான துருகம் சாலை மயானத்தில் வள மீட்பு மையம் அமைந்துள்ளது. மேற்படி வள மீட்பு மையத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டிய திடக்கழிவு பொருட்களை பிரித்து எடுப்பதற்கான இடவசதி இல்லாததால் திறந்தவெளியிலேயே கொட்டப்பட்டு பிரிக்கப்படுவதால், மழைக்காலங்களில் ஏற்படும் சிரமத்தினை தவிர்த்திடும் வகையில், வள மீட்பு மையத்தின் முன்பகுதியில் காலியாகவுள்ள இடத்தில் புதியதாக ஷெட் அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, வள மீட்பு மையத்தின் முன்பகுதியில் புதியதாக ஷெட் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 6,00,000/- (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்)-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் / குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். / 2021 / இ1)**

## பொருள் எண் 23

நகராட்சி எல்லைக்குட்பட்ட க.மாமனந்தல் சாலையில் உள்ள குறுக்கு தெருவிற்கு செல்லும் சாலையின் சந்திப்பில் உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளது. இதனால் மழைநீர் மற்றும் கழிவுநீர் இப்பகுதியினை கடந்து செல்லாமல் ஒருபுறம் முழுவதும் தேங்கியுள்ளது. இதனால் இப்பகுதி சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் உள்ளது. மேலும் தேங்கியுள்ள கழிவுநீர் சாலையில் தேங்கி தார்சாலை முழுவதும் சேதமடைய வாய்ப்பு உள்ளது. எனவே இச்சந்திப்பில் சேதமடைந்துள்ள சிறுபாலத்தினை சரி செய்து புதியதாக சிறுபாலம் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-(ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்)க்கு இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 781/2021/இ1

## பொருள் எண் 24

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தார்சாலைகள் 34.12 கி.மீ மற்றும் சிமெண்ட் சாலைகள் 19.18 கி.மீ மொத்தம் 53.30 கி.மீ.உள்ளது- இச்சாலைகள் கடந்த நிவர் புயல் மற்றும் குடிநீர் குழாய் உடைப்பு சரி செய்தல் போன்ற பணிகளால் ஆங்காங்கே பழுதடைந்துள்ளது. இதனால் வாகன ஓட்டிகளும், பொது மக்களும் மிகவும் பாதிக்கப்படுவதால், மேற்படி பழுதுகளை நீக்க தோண்டப்படும் பள்ளங்களினால் விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, இச்சாலைகளில் சேதமடைந்த இடங்களை தார் ஒட்டும்பணி (Patch works) மூலம் சீரமைக்க வேண்டிய பணி அவசியமாகிறது. எனவே இப்பணிக்கு ரூ.9,00,000/-(ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் இ1/772/2021

## பொருள் எண் 25

இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்:- ல் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு நோய் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகளுக்கு, 47 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு ராசி மகளிர் சுயஉதவிக்குழுவின் மூலம் தேர்ந்தெடுத்து ஜூன் 2021 வரை அனுமதி பெறப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், தற்போது இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் மற்றும் டெங்கு நோய் வெகுவாக பரவி வருவதால் டெங்கு நோய் தடுப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் கொசுப்புழு பணியாளர்களை பணி நீட்டிப்பு செய்து இந்நோய் குறித்த விழிப்புணர்வு பொது மக்களிடம் ஏற்படுத்தவும், டெங்கு மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்க வேண்டும். எனவே, பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் ஏற்கனவே பணிபுரியும் ராசி மகளிர் சுயஉதவி குழு மூலமாகவே தொடர்ந்து 47 பணியாளர்களை ஜூலை 2021 முதல் செப்டம்பர் 2021 வரை 3 மாதத்திற்கு பணியில் அமர்த்திகொள்ளவும், இவர்களுக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகை நாளொன்றுக்கு ரூ.289/- வீதம் ஊதியம் வழங்கிடவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.12.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பணிபுரியும் ராசி மகளிர் சுயஉதவிகுழு மூலமாகவே ஜூலை 2021 மாதம் முதல் செப்டம்பர் 2021 வரை 3 மாதத்திற்கு பணிபுரியவும் மன்றம் அனுமதிக்கலாம்

3.மாவட்ட ஆட்சி தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகையான நாளொன்றுக்கு ரூ.289/- ஊதியமாக வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

4.பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1490 /2019/எச்1)**

## பொருள் எண் 26

அரசாணை (நிலை எண் 154) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை எம்.ஏ. 5, நாள் 09.08.2010ன்படி இந்நகராட்சி முதல்நிலை நகராட்சி என்பதால் இந்நகராட்சி பொறியியல் பிரிவில் 5 பணியிடங்கள் மட்டுமே உள்ளது. அதன் விபரம்

1. நகராட்சி பொறியாளர் – 1 எண்ணிக்கை
2. பணி மேற்பார்வையாளர் – 1 எண்ணிக்கை
3. நீர்த்தேக்க தொட்டி காவலர் – 1 எண்ணிக்கை
4. பணி ஆய்வாளர் – 1 எண்ணிக்கை
5. குழாய் ஆய்வாளர் – 1 எண்ணிக்கை

மேலும் இந்நகராட்சியில் தெருமின் விளக்குகள் குடிநீர் உபகரணங்கள் ஆகிய பணிகள் மேற்கொள்ளவும் பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படாததால் இந்நகராட்சியில் கீழ்க்கண்டவாறு தெருமின் விளக்குகள் மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

1. தெருமின் விளக்குகள்

| வ.எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தெருமின் விளக்குகள் | 1167 |
| 2 | சோடியம் ஆவி விளக்குகள் | 459 |
| 3 | சி.எப்.எல் | 154 |
| 4 | உயர் கோபுர மின் விளக்கு | 5 |
| | மொத்தம் | 1785 |

2. குடிநீர் பராமரிப்பு பணிகள் விபரம்

| வ.எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | குடிநீர் இணைப்புகள் | 6790 இணைப்புகள் |
| 2 | பைப்லைன் அமைக்கப்பட்டது | 65.60 கி.மீ நீளம் |
| 3 | கேட் வால்வு திறப்பான் | 200 எண்ணிக்கை |
| 4 | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | 6 (30.00 இலட்சம் கொள்ளளவு) |
| 5 | மினிபவர் பம்ப் 2000 லி | 283 எண்ணிக்கை |
| 6 | கைப்பம்புகள் | 15 எண்ணிக்கை |

மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சியில் பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படாததால் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தரப்படுத்தப்பட்ட விலைவிகிதத்தில் 20 பணியாளர்கள் நியமனம் செய்து கொள்ளவும், தினக்கூலி விகிதத்தில் ரூ.353/– வீதத்தில் 15 பணியாளர்களுக்கு ஏற்கனவே மன்ற தீர்மான எண் 251/2020 நாள் 31.03.2020ல் 2020–2021 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ரூ.371/– வீதத்தில் 15 பணியாளர்களுக்கு ஏற்கனவே மன்ற தீர்மான எண்354 /2020 நாள் 30.09.2020ல் 01.10.2020 முதல் 31.12.2020 முடிய 3 மாதங்களுக்கு 2020–2021 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது 01.07.2021 முதல் 31.09.2021 வரை 3 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், கள்ளக்குறிச்சி அவர்களின் தரப்படுத்தப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.371/–இல் விலை விகிதத்தில் வழங்க உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மட்டும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஆண்கள் சுய உதவிக்குழுக்கள் வழியாக 15 நபர்களை நியமனம் செய்து மாவட்ட ஆட்சித்தலைவர், கள்ளக்குறிச்சி அவர்களின் விலை விகிதத்தில் ஊதியம் வழங்கவும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் இ1 / 3445/ 2019 )

## பொருள் எண் 27

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை ஆங்காங்கே முறைப்படுத்தி உரமாக்கும் விதமாக சிறிய அளவில் Onsite Compost Tub மற்றும் Garden Compost Tubகள் கட்டப்பட்டன. இவைகள் தற்சமயம் பழுதடைந்துள்ளதால் உரங்களை கையாழுவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே, இத்தொட்டிகளை சீரமைக்கவும், நகரில் உள்ள 3 எண்கள் நுண் உயிரிய முறையில் குப்பைகளை உரமாக்க கட்டப்பட்ட அமைப்பில் Micro Compost Yard உள்ளது. இவற்றில் தினமும் நகரில் வீடுகளிலிருந்து பெறப்படும் மக்கும் குப்பைகளை கையாளப்பட்டு வருகின்றது.

தினமும் சேகரமாகும் குப்பைகளை அளவீடுகள் செய்யவும், விற்கப்படும் உரங்களை எடை அளவுகள் மேற்கொள்ள எடை இயந்திரம் அவசியமாகின்றது. இதன் படி 3 எண்கள் எடை அளவு இயந்திரம் (ESSL – 600 kg) வாங்கவும், மேற்படி பழுதுகளை சரிசெய்யவும் உத்தேச செலவீனம் ரூ. 3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1368/2021/இ1)**

## பொருள் எண் 28

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட கா.மாமனந்தல் சாலையில் உள்ள சிறுபாலம் மற்றும் கால்வாய் பழுதடைந்து, கழிவுநீர் செல்ல இயலாமல் ஆங்காங்கே தேங்கி உள்ளதால், அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன், பொது சுகாதாரக்கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. இதனை தவிர்க்க இக்கால்வாய்களின் பக்கவாட்டு சுவர்கள் மற்றும் பழுதடைந்த சிறுபாலத்தினை சீரமைக்கவும், புதியதாக கால்வாய் மற்றும் சிறுபாலம் கட்டவும் தயார் செய்யப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ. 1,50,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1373/2021/இ1)**

## பொருள் எண் 29

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட முக்கிய சந்திப்புகளில் மின் கம்பங்கள் இன்றி உள்ளதால் இப்பகுதிகளில் இரவு நேரங்களில் மின் விளக்கு வசதி இல்லாமல் உள்ளது. இதனால் இச்சாலை சந்திப்புகளில் விபத்துக்ள் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை தடுக்கவும், நகராட்சி முக்கிய பகுதிகளை அழகான சிறு பூங்காவுடன் கூடிய (Traffic gland park) சூரிய சக்தி சிறு உயர் மின் கோபுர விளக்குகள் (Mini Mass Light) 3 இடங்களில் அமைக்க அவசியமாகின்றது. இப்பணிக்கு தோராய மதிப்பீடு தொகை ரூ. 9,00,000/– (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1367 /2021/இ1)**

## பொருள் எண் 30

கள்ளக்குறிச்சி நகராட்சியின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதில் உள்ளூர் நீராதாரங்களில் முக்கிய பங்காற்றிடும் வகையில் சங்கராபுரம் சாலையில் அமைந்துள்ள திறந்தவெளி கிணறு மற்றும் அங்கு அமைந்துள்ள மின் மோட்டார் அறைகள் அமைந்துள்ளன. இப்பகுதியினை சுற்றிலும் போதிய வேலி அல்லது சுற்றுச் சுவரோ இல்லாததால் அதிக அளவில் பொது மக்கள் இவ்விடங்களில் வந்து செல்வதும், இப்பகுதியினை சுகாதாரக்கேடான செயல்களில் ஈடுபடுவதும் தெரியவருகின்றது. இப்பகுதியில் உள்ள கிணறு குடிநீர் தேவைக்காக பயன்படுத்தப்படுவதால் சுகாதாரத்தினை பேணிக்காக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே இப்பகுதியினை சுற்றிலும் சுற்றுச்சுவர் அமைத்து, நுழைவாயில் Gate அமைக்க மதிப்பீடு தொகை ரூ. 9,00,000/– (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1366/2021/இ1)**

## பொருள் எண் 31

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளுக்கும் 3" PVC குழாய் மூலம் குடிநீர் பகிர்மானம் செய்யப்பட்டு வருகின்றது. இதில் உள்ள 74 கி.மீ நீளமுள்ள பகிர்மான குழாய்களில் போதிய Air Valve இல்லாமல் உள்ளதால் அடிக்கடி உடைப்பு ஏற்படுகின்றது. மேலும் இக்குழாய்களில் Scour Valve இன்றி உள்ளதால் குழாய்களில் ஏற்படும் பழுது நீக்கம் பணிகளில் குழாய்களில் உள்ள நீரினை அகற்றவும், குழாய்களில் ஏதேனும் மாசு ஏற்படும் வேலையில் இந்நீரினை முழுவதும் வெளியேற்ற தேவையான Scour இல்லை.

மேலும், குடிநீர் பகிர்மானத்தில் பள்ளமான பகுதிகளில் அதிக அளவு குடிநீர் செல்வதால் மேடான பகுதிகளுக்கு தண்ணீர் சேவை பாதிக்கப்படுகின்றது. இதனை ஒழுங்குபடுத்த Gate Valve அமைத்து சீரான விநியோகம் செய்வது முக்கிய பணியாகும். எனவே, மேற்கண்ட Air Valve, Scour Valve மற்றும் Gate Valve மற்றும் இதனை பொறுத்த தேவையான உதிரி பாகங்கள் வாங்க தயார் செய்யப்பட்ட தோராய மதிப்பீடு ரூ. 8,50,000/– (ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் / குடிநீ நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1371 / 2021 / இ1)**

## பொருள் எண் 32

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 15ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கிணறு மற்றும் மோட்டார் அறை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இக்கிணற்று நீரானது இப்பகுதி பொதுமக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதில் முக்கிய பங்காற்றி வருகின்றது. இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் அருகில் உள்ள பொதுமக்கள் இந்நீரினை பயன்படுத்தி வருகின்றனர். எனவே, பழுதடைந்துள்ள கிணற்றின் சுவர், மோட்டார் அறையினை மேம்படுத்தவும், இப்பகுதியில் சுகாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ. 7,00,000/– (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் / குடிநீர் நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1369 /2021/இ1)**

## பொருள் எண் 33

கள்ளக்குறிச்சி நகராட்சியில் எல்லைக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து இந்நகரப்பகுதியில் 3 இடங்களில் நுண்ணுயிர் உரக்களம் (MCC) மற்றும் 12 இடங்களில் குப்பை உருவாகும் இடத்திலேயே உரம் தயாரித்தல் (OCC)ஆகிய இடங்களில் தினசரி சேகரமாகும் மக்கும் குப்பைகளை மேற்கண்ட இடங்களுக்கு சென்று உரம் தயாரிக்கும் பணியினை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது அவ்வாறு உரம் தயாரிக்கும் பணிக்கு E.M.சொலிவ்ஷன் தற்போது இருப்பில் இல்லாத காரணத்தினால், மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி E.M .சொலிவ்ஷன் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.**9.90** லட்சத்திற்கு மன்றப்பொருள் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசரஅவசியம் கருதிவிலைப்புள்ளிகோரிபணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3.பட்டியல் தொகையினைநகராட்சிவருவாய் நிதியிலிருந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1400 /2021/எச்1)**

**பொருள் எண் 34**

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து மழைநீர் வடிகால்களையும் GPS வழியாக நீளம், வகைபாடு, அகலம், இணைப்பு தன்மை, தரவு தன்மை, மதிப்பீடுகள், வெளியீடுகள் தயாரித்தல், நிலவரைபடத்துடன் கூடிய அறிக்கையாக தயாரிக்க கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டப்பட்டதற்கு இணங்க, மேற்படி பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 9.00 இலட்சம் (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:-**

1.பதிவு செய்யலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி, பணிகள் மேற்கொள்ளமன்றம் அங்கீகரிக்கலாம்.

3.பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் இ1/ 2020 / 2021**

**பொருள் எண் 35**

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில் மற்றும் நகர்மன்ற கூட்ட அரங்கின் முன்புறம் உள்ள வரவேற்பு பகுதியில் (Corridar / Varandha) அதிக அளவில் பொதுமக்கள் பயன்படுத்தும் பகுதியாக உள்ளது. மேலும் இப்பகுதியில் சிறிய அளவிலான கலந்தாய்வு கூட்டங்கள், விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றது. மேலும் அலுவலகத்திற்கு வருகைபுரியும் பொதுமக்களின் காத்திருப்பு பகுதியாகவும் உள்ளது. எனவே, இப்பகுதியில் 20 எண்கள் கொண்ட மின் விசிறிகள் அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்கண்ட பகுதியில் புதியதாக மின் விசிறிகள் அமைப்பதற்கான தோராய செலவினம் ரூ.85000/-(ரூபாய் எண்பத்து ஐந்தாயிரம் மட்டும்)-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு

1. மன்ற அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1372/2021/இ1

பொருள் எண் 36

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 05, ராஜா நகரில் இந்நகராட்சிக்குச் சொந்தமான பூங்கா அமைந்துள்ளது. மேற்படி பூங்காவில் 24.06.2021 அன்று கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஆய்வில், பூங்காவினை மேம்படுத்தும் விதமாக, சுற்று சுவர்களுக்கு வர்ணம் பூசவும், பூங்காவின் உட்புறம் உள்ள நடைபாதைகளை மேம்படுத்தவும், மின் விளக்குகள் மற்றும் அலங்கார செடிகள், புற்களை கொண்டு தரைகளை மேம்படுத்திடவும் அறிவுறுத்தியுள்ளார்.

எனவே, ராஜா நகரில் உள்ள பூங்காவினை மேம்பாடு செய்யும் விதமாக, சுற்றுசுவர்களுக்கு வர்ணம், அலங்கார மின் விளக்குகள், செடிகள், புற்கள் மற்றும் இதர பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 5,50,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.            / 2021 / இ1)**

பொருள் எண் 37

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தில் பேருந்துகள் உள்ளே செல்லும் வழியில் ஆண்களுக்கென சிறுநீர் கழிப்பிடம் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில், மேற்படி சிறுநீர் கழிப்பிடமானது உட்புறமாக உள்ளதால், அடிக்கடி சேதமடைந்துள்ளதனை, அடிக்கடி பழுது நீக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டும் இதே நிலை தொடர்வதால், பழுது நீக்க பணிகள் செய்ய இயலாத நிலையில், பேருந்து நிலையத்தின் தென்கிழக்கு புறம் பொது கழிவறைக்கு அருகில் புதியதாக சிறுநீர் கழிப்பிடம் கட்டப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது.

மேலும், மேற்படி பேருந்துகள் உள்ளே செல்லும் வழியில் உள்ள பழுதடைந்து சுகாதாரமற்ற நிலையில் உள்ள சிறுநீர் கழிப்பிடத்தில் இரவு நேரங்களில் சமூக விரோத செயல்கள் ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு, அச்சிறுநீர் கழிப்பிடத்தினை முற்றிலும் இடித்து அப்புறப்படுத்திட துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, மேற்படி சிறுநீர் கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.       /2021/இ1)**

**பொருள் எண் 38**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 02 வஉசி நகர் 1-வது பிரதான சாலையில் நகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி கிணறு அமைந்துள்ளது. மேற்படி கிணறு பல ஆண்டுகளாக பராமரிப்பு இன்றி பழுதடைந்து உள்ளது. இப்பகுதியில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் 17.06.2021 அன்று நேரடி தல ஆய்வு செய்யப்பட்டதில், மேற்படி கிணற்றினை சுத்தம் செய்து, தூர்வாரி மேம்படுத்திடவும், அருகில் உள்ள குடியிருப்புகளிலிருந்து வரும் மழைநீரினை தேக்கி, மழைநீர் சேகரிப்பாக மாற்றிடவும் எதிர்வரும் மழைக்காலங்களில் கிணற்றின் நீர்மட்டம் உயரும்போது கிணற்று நீரினை பயன்படுத்தும் வகையில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார். எனவே, மேற்படி திறந்தவெளி கிணற்றுக்கு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.350000/-(ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் /2021/இ1

**பொருள் எண் 39**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 10,15 மற்றும் இதர பகுதிகளில் புதியதாக வீட்டு மனைப்பிரிவுகள் அமைக்கப்பட்டு, குடியிருப்புகள் அதிகமாக உள்ளன. எனவே, மேற்படி பகுதிகளில் உள்ள குடியிருப்புதாரர்களுக்கு அடிப்படை வசதியான குடிநீர் வழங்குவது மிகவும் முக்கிய கடமையாகவும், இக்கட்டிடங்களுக்கு UIDSSMT திட்டத்தின் மூலம் நகராட்சி சார்பில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்குவது அவசியமான பணியாக உள்ளது. எனவே, இப்பகுதிகளில் உள்ள தெருக்களுக்கு முதல் அடிப்படை வசதியான குடிநீர் விநியோக குழாய் அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.8,00,000/-(ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்)-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் /2021/இ1)

**பொருள் எண் 40**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு 13 எண்ணிக்கை திறந்தவெளி கிணறுகள் உள்ளன. மேற்படி திறந்தவெளி கிணற்றிலிருந்து தண்ணீரினை இந்நகரப் பொதுமக்களுக்கு மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் நீரேற்றம் செய்தும் / நேரடியாக குடிநீர் பகிர்மான குழாய்களின் மூலமாகவும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

மேற்படி திறந்தவெளி கிணற்றில் மின்மோட்டார்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதனால், மேற்படி மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்ய ஏற்படும் காலதாமதத்தினால் அப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் சரியான முறையில் செய்ய இயலாத சூழல் ஏற்படுகிறது. மேற்படி மின் மோட்டார்கள் பழுது ஏற்படும் சமயத்தில் பழுது நீக்கம் செய்ய ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு Stand-by (Spare) மின்மோட்டார்களை இறக்கி குடிநீர் தங்கு தடையின்றி விநியோகம் செய்வதற்கு ஏற்ப கீழ்க்காணும் பகுதிகளில் உள்ள திறந்தவெளி கிணற்றுக்கு Stand-by மின்மோட்டார்கள், பேனல் போர்டுகளி வாங்கி இருப்பு வைத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

1. சங்கராபுரம் சாலை தலைமை நீருந்து நிலையம் - 25.00 Hp
2. கவரைத்தெரு - 15.00 Hp
3. க.மாமனந்தல் சாலை - 25.00 Hp
4. கரியப்பா நகர் - 15.00 Hp

எனவே, மேற்கண்ட விபரப்படி உள்ள திறந்தவெளி கிணற்றுக்கு தேவையான Stand-by (Spare) மின் மோட்டார்கள், பேனல் போர்டுகள் வாங்கி இருப்பில் வைத்துக் கொள்ளவும், அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.5,00,000/-க்கு (ரூ ஐந்து இலட்சம் உட்பட ) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி, பணிகள் மேற்கொள்ளமன்றம் அங்கீகரிக்கலாம்.

3. பணியினை மேற்கொள்ளப்படும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் இ1/ / 2021**

## பொருள் எண் 41

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 15 முதல் 21 வரை 105 எண்கள் சிறுமின் விசைப்பம்ப்கள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர் குடிநீர் பகிர்மான குழாய்களுக்கும் கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகின்றது. இந்த அமைப்பில் மோட்டார் குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்சர்கள், பிவிசி மேல் நிலை தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரி செய்யும் பணி மிகவும் அவசியமாகின்றது.

நகராட்சி பொது மக்களுக்கு குடிநீர் வழங்குவதில் எந்தவித இடையூறும் இன்றி தண்ணீர் வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றது மேலும் இப்பணி நகராட்சியில் முக்கிய பணிகளில் ஒன்றாகவும் உள்ளது. எனவே மேற்கண்ட பணிகளில் உதிரிபாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய இவ்வாண்டிற்காக (2021-2022) உத்தேச மதிப்பீடு ரூ.9,95,000/-க்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னூற்று ஐந்தாயிரம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி, பணிகள் மேற்கொள்ளமன்றம் அங்கீகரிக்கலாம்.

3. பணியினை மேற்கொள்ளப்படும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் இ1/ 1245 / 2021**

## பொருள் எண் 42

கள்ளக்குறிச்சி நகராட்சியின் மொத்தம் உள்ள 21 வார்டுகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மற்றும் 3 நகராட்சி கிணறுகள் மூலமாகவும், 6 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் சேகரிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேலும் குழாய்கள் வாரியாக 7.20 கி.மீ குடிநீர் விநியோக பிரதான குழாய் மற்றும் 75.68 கி.மு துணை ஆதாரக் குழாய்கள் மூலம் நகராட்சிக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இவற்றில் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வீணாகிறது. மேலும் வால்வுகளில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் தண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டு வருகின்றது.

இவைகளை உடனுக்குடன் சரி செய்து சீரான தடையற்ற குடிநீர் விநியோகம் செய்யும் அவசியத்தினை முன்னிட்டு இதற்காக பணிகள் மேற்கொள்ள ஆகும் தோரா மதிப்பீடு ரூ.9,00,000/-க்கு (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி, பணிகள் மேற்கொள்ளமன்றம் அங்கீகரிக்கலாம்.

3. பணியினை மேற்கொள்ளப்படும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் இ1/ 1244 / 2021**

## பொருள் எண் 43

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 10இல் உள்ள திருவரங்கம் நகர் பகுதியில் உள்ள சாலையானது மண் சாலையாக உள்ளது. இதனால் இச்சாலை முழுவதும் தண்ணீர் தேங்கி சுகாதாரக்கேடு ஏற்படுவதுடன் இச்சாலையினை பொது மக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே இச்சாலையின் ஒருபுறம் கால்வாய் அமைத்தும், சாலையினை பேவர்பிளாக் சாலையாக அமைக்கவும் அவசியமாகிறது. எனவே, இப்பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/-க்கு (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்ற ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி, பணிகள் மேற்கொள்ளமன்றம் அங்கீகரிக்கலாம்.

3. பணியினை மேற்கொள்ளப்படும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் இ1/ / 2021**

## பொருள் எண் 44

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 08 முதல் 14 வரை 89 எண்கள் சிறுமின் விசைப்பம்ப்கள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர் குடிநீர் பகிர்மான குழாய்களுக்கும் கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகின்றது. இந்த அமைப்பில் மோட்டார் குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்சர்கள், பிவிசி மேல் நிலை தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரி செய்யும் பணி மிகவும் அவசியமாகின்றது.

நகராட்சி பொது மக்களுக்கு குடிநீர் வழங்குவதில் எந்தவித இடையூறும் இன்றி தண்ணீர் வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றது மேலும் இப்பணி நகராட்சியில் முக்கிய பணிகளில் ஒன்றாகவும் உள்ளது. எனவே மேற்கண்ட பணிகளில் உதிரிபாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய இவ்வாண்டிற்காக (2021-2022) உத்தேச மதிப்பீடு ரூ.9,95,000/-க்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னூற்று ஐந்தாயிரம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி, பணிகள் மேற்கொள்ளமன்றம் அங்கீகரிக்கலாம்.

3. பணியினை மேற்கொள்ளப்படும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் இ1/ 1246 / 2021**

பொருள் எண் 45

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 07 வரை 114 எண்கள் சிறுமின் விசைப்பம்ப்கள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.
இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர் குடிநீர் பகிர்மான குழாய்களுக்கும் கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகின்றது. இந்த அமைப்பில் மோட்டார் குழாய்கள், பேனல் போர்டுகள், கன்டன்சர்கள், பிவிசி மேல் நிலை தொட்டிகள் மற்றும் இதர உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரி செய்யும் பணி மிகவும் அவசியமாகின்றது.
நகராட்சி பொது மக்களுக்கு குடிநீர் வழங்குவதில் எந்தவித இடையூறும் இன்றி தண்ணீர் வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றது மேலும் இப்பணி நகராட்சியில் முக்கிய பணிகளில் ஒன்றாகவும் உள்ளது. எனவே மேற்கண்ட பணிகளில் உதிரிபாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய இவ்வாண்டிற்காக (2021-2022) உத்தேச மதிப்பீடு ரூ.9,85,000/-க்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி, பணிகள் மேற்கொள்ளமன்றம் அங்கீகரிக்கலாம்.

3. பணியினை மேற்கொள்ளப்படும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து
வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் இ1/ 1243 / 2021**

**ஆணையாளர்**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**